## உள்ளூராட்சி சேவைகள் தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியம் - 2017

உள்ளூராட்சி சேவைகள் தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1974 இன் 16 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட 1986 இன் உள்ளூராட்சி சேவைகள் தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் கட்டளை இலக்கம் 06 உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உள்ளூராட்சி சேவைகள் தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தால் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட ரூபா 11,504,404 தொகை செலவினமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது பெறப்பட்டிருந்த முன்னைய ஆண்டுகளிற்குரிய ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை ரூபா 15,069 வருமானச் செலவினக் கணக்கில் பற்றாக்குறையாக காட்டப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயலாற்றல்

1985 இன் 10 ஆம் இலக்க உள்ளூராட்சி சேவைகள் (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 16(அ) பிரிவின் பிரகாரம் உள்ளூராட்சி சேவையில் ஓய்வூதியத்துடன் அங்கத்தவர்களின் தபுதாரர்களுக்கும், அநாதைகளுக்கும் ஓய்வூதியம் செலுத்தும் நோக்கில் இந்த நிதியம் உருவாக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 1993 ஆம் ஆண்டில் மாகாண பொதுச் சேவை ஸ்தாபிக்கப்பட்டதுடன் உள்ளூராட்சி சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிற்கு அரசாங்க உத்தியோகத்தர்களிற்குரிய ஓய்வூதியம் மற்றும் விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நன்மைகள் உரித்துடையதாக இருந்தன. 1993 செப்தெம்பர் 03 தொடக்கம் மீளாய்வாண்டு வரை இந்த நிதியத்திற்கு புதிய அங்கத்தவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு புதிய அங்கத்தவர்களின் பங்களிப்புத் தொகை பெறப்படாமையால் அவ் உத்தியோகத்தர்களிற்கு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நிதியத்தின் பணம் போதுமானதாக இருக்கவில்லை. இருந்தபோதிலும் ஓய்வூதியத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழ் பாதீட்டு நிதியேற்பாட்டின் மூலம் நிதியத்தின் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக இந்த நிதியம் உருவாக்கப்பட்டதன் பிரதான நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 3.2 தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

ஓய்வூதியத்திற்கு உரித்துடைய ஓய்வூதியதாரர்களின் நாளதுவரையாக்கப்பட்ட பெயர் பட்டியலொன்று நிதியத்திடம் காணப்படாததால் ஓய்வூதியதாரரின் மரணத்தின் போது அதற்காக செய்யவேண்டிய சீராக்கங்கள் செயற்திறனாக செய்யப்படாமையால் தவறான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட முடியந்திருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 4.1 உள்ளகக் கணக்காய்வு

ஓய்வூதியத் திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் அப் பிரிவினால் அல்லது நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. ஓய்வூதியங்களை கொடுப்பனவு செய்யும் போது பிரதேச மட்டத்தில் தகவல்கள் கோரப்பட்டு நிதியத்தின் அங்கத்தவர்கள் தொடர்பான தகவல்கள் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படாதமை தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.